தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கம் மற்றும் பலர்

/எதிர்/

இந்திய அரசு மற்றும் பலர்

(நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண் 196/2018)-இல்

(வ.வி. எண் 33686/2018)

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24 ஆம் நாள்

[மாண்புமிகு தலைமை நீதியரசர் திரு.தீபக் மிஸ்ரா, மாண்புமிகு நீதியரசர் திரு.ஏ.கே.சிக்ரி, மாண்புமிகு நீதியரசர் திரு.ஏ.எம்.கான்வில்கர், மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு.டி.ஒய். சந்திரசூட் மற்றும் மாண்புமிகு நீதியரசர் திரு.அசோக் பூஷன்]

முதுகலை மருத்துவக் கல்வி ஒழுங்குமுறைகள், 2000:

*ஒழுங்குமுறை 9 – அந்த ஒழுங்குமுறையை சவாலுக்குட்படுத்தும் நீதிப்பேராணை மனு - அந்த ஒழுங்குமுறையின் வகையங்கள், தினேஷ் சிங் சவுகான் வழக்கில் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வால் பரிசீலிக்கப்பட்டது - *தினேஷ் சிங் சவுகான் வழக்கை மறுபரிசீலனை செய்வதற்காக, இந்த வழக்கு அரசியலமைப்பு அமர்வுக்கு பரிந்துரைக்கப்பட்டது - முதுகலை படிப்புகளில் சேர விரும்பும் பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு (in-service candidates) தனி நுழைவு மூலத்தை மாநிலங்கள் வழங்குவதை சட்ட வகையங்கள்*

*தடுப்பதாகக் கருதப்படும் அளவிற்கு, அந்த ஒழுங்குமுறையின் செயல்பாட்டை நிறுத்திவைக்க கோரப்படுகிறது - 2018-19 கல்வியாண்டுக்கான முதுகலை பட்டப்படிப்புகளில் சேர்ப்பதற்காகப் பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு (in-service candidates) ஒரு தனி நுழைவு மூலத்தை வழங்குவதற்கான தனது கொள்கையை நடைமுறைப்படுத்த மாநில அரசுக்கு அனுமதி அளிக்குமாறு உத்தரவு கோரப்பட்டது - இடைக்கால நிவாரணமும் அரசியலமைப்பு அமர்வுக்கு பரிந்துரைக்கப்பட்டது - இடைக்கால நிவாரணத்தை கருத்தில் கொண்டு, இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்ததாவது: தினேஷ் சிங் சவுகான் வழக்கானது, அரசியலமைப்பு அமர்வின் தீர்ப்புகளை உரிய முறையில் கவனித்த பிறகு, ஒழுங்குமுறை 9(iv)-ன் வகையங்களை விளக்கியது - **தினேஷ் சிங் சௌஹான் வழக்கின் தீர்ப்பு இன்னும் நடைமுறையில் உள்ளது மற்றும் இடைக்கால நிவாரணத்தை பற்றி முடிவு செய்யும் இந்த கட்டத்தில் அதை ஒதுக்கித் தள்ள முடியாது - இந்தக் கட்டத்தில் இடைக்கால நிவாரணம் வழங்குவது, கட்டாயமான இறுதி உத்தரவுக்குச் சமமானதாகும்; எனவே, அது மறுக்கப்படுகிறது - வழக்கிடை உத்தரவு.***

உத்தரப் பிரதேச மாநில அரசு /எதிர்/ தினேஷ் சிங் சவுகான்,* **(2016) 9 எஸ்.சி.சி. 749: [2016] 6 எஸ்.சி.ஆர். 571: *ஆர்.சித்ரலேகா /எதிர்/ மைசூர் மாநில அரசு,* **[1964] 6 எஸ்.சி.ஆர். 368**; *குமாரி சித்ரா கோஷ் /எதிர்/*

இந்திய அரசு, (1969) 2 **எஸ்.சி.சி.** 228: [1970] 1 **எஸ்.சி.ஆர்.** 413; *நவீன பல் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் /எதிர்/ மத்தியப் பிரதேச மாநில அரசு,* (2016) 7 **எஸ்.சி.சி.** 353; *கே.துரைசாமி /எதிர்/ தமிழ்நாடு மாநில அரசு,* (2001) 2 **எஸ்.சி.சி.** 538: [2001] 1 **எஸ்.சி.ஆர்.** 490; எய்ம்ஸ் மாணவர் சங்கம் */எதிர்/ எய்ம்ஸ்,* (2002) 1 **எஸ்.சி.சி.** 428 : [2001] 2 **சப்ளி. எஸ்.சி.ஆர்.** 79; *மத்தியப் பிரதேச மாநில அரசு /எதிர்/ கோபால் டி தீர்த்தனி.* (2003) 7 **எஸ்.சி.சி.** 83: [2003] 1 **சப்ளி. எஸ்.சி.ஆர்.** 797; *சுதிர்.என். /எதிர்/ கேரளா மாநில அரசு,* (2015) 6 **எஸ்.சி.சி.** 685: [2015] 1 **எஸ்.சி.ஆர்.** 884; *டாக்டர் ப்ரீத்தி ஸ்ரீவஸ்தவா /எதிர்/ மத்தியப் பிரதேச மாநில அரசு,* (1999) 7 **எஸ்.சி.சி.** 120: [1999] 1 **சப்ளி. எஸ்.சி.ஆர்.** 249 - **குறிப்பிடப்பட்டது.**

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

[2016] 6 எஸ்.சி.ஆர். 571	பத்தி 1	குறிப்பிடப்பட்டது
[1964] 6 எஸ்.சி.ஆர். 368	பத்தி 2	குறிப்பிடப்பட்டது
[1970] 1 எஸ்.சி.ஆர். 413	பத்தி 2	குறிப்பிடப்பட்டது
(2016) 7 எஸ்.சி.சி. 353	பத்தி 2	குறிப்பிடப்பட்டது
[2001] 1 எஸ்.சி.ஆர். 490	பத்தி 7	குறிப்பிடப்பட்டது
[2001] 2 சப்ளி. எஸ்.சி.ஆர். 79	பத்தி 7	குறிப்பிடப்பட்டது
[2003] 1 சப்ளி. எஸ்.சி.ஆர். 797	பத்தி 7	குறிப்பிடப்பட்டது

[2015] 1 எஸ்.சி.ஆர். 884 பத்தி 7 குறிப்பிடப்பட்டது

[1999] 1 சப்ளி. எஸ்.சி.ஆர். 249 பத்தி 13 குறிப்பிடப்பட்டது

உரிமையியல் அசல் அதிகார வரம்பு: நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண் 196/2018)-இல் வ.வி. எண் 33686/2018.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், 32 வது ஷரத்தின் கீழ்.

உடன்

நீதிப்பேராணை மனு (உ) எண்கள் 252, 295 மற்றும் 293/2018.

அமன் லேகி, கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர், அரவிந்த் தத்தர், கே.வி.விஸ்வநாதன், ஏ.கே.சின்ஹா, விகாஸ் சிங், வி.கிரி, மூத்த வழக்கறிஞர்கள், அஜய் பார்கவா, வனிதா பார்கவா, சமன் அஹ்சன், ஆயுஷ் ஜெயின், தி/ள்.கைதான் & கோ., ஜோஸ் ஆபிரகாம், ஹரிஷ் பாண்டே, டாக்டர் நிஷேஷ் சர்மா, சரத் குமார் சிங்கானியா, ரோஹித் பட், குர்மீத் சிங் மக்கர், கௌரவ் சர்மா, தவால் மோகன், பிரதீக் பாட்டியா, அமன்தீப் கவுர் அஹுஜா, அபிஷேக், தீபிகா கலியா, ஸ்ரீஸ்டி பானர்ஜி, கே.வி.விஜயகுமார், மைத்ரேயி மிஸ்ரா, தபேஷ் குமார் சிங், முகமது வக்வாஸ், ஆதித்ய பிரதாப் சிங், ஜி.பிரகாஷ், ஜிஷ்ணு எம்.எல்., திருமதி. பிரியங்கா பிரகாஷ், திருமதி. பீனா பிரகாஷ், விஜய் ஷங்க் வி.எல்.,

விஜயா மோகன்.வி ஆகியோர் முன்னிலையாகும் தரப்பினர்களுக்காக ஆஜராகினார்.

இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு **மாண்புமிகு நீதியரசர் முனைவர் டி.ஒய்.சந்திரசூட்** அவர்களால் வழங்கப்பட்டது.

1. **உத்தரப் பிரதேச மாநில அரசு /எதிர்/ தினேஷ் சிங் சவுகான்**, (2016) 9 எஸ்.சி.சி. 749 என்ற வழக்கில் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கிய தீர்ப்பில், பிப்ரவரி 15, 2012 அன்று திருத்தப்பட்ட, இந்திய மருத்துவ கவுன்சில் முதுகலை மருத்துவக் கல்வி ஒழுங்குமுறைகள் 2000, ஒழுங்குமுறைகள் 9 (IV) மற்றும் 9 (VII) ஆகியவற்றின் வகையங்களை உள்ளடக்கியது. தற்போதைய வழக்குகளின் தொகுப்பில், மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, ஏப்ரல் 13, 2018 தேதியிட்ட உத்தரவின் மூலம், இந்த மனுக்களை ஒரு பெரிய அமர்வு பரிசீலிக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தது.

2. இந்த பரிந்துரையை செய்யும்போது, பரிந்துரைக்கப்படும் உத்தரவு முதன்மையாக பின்வரும் காரணங்களைச் சுட்டிக்காட்டியது:

(i) **தினேஷ் சிங் சவுகான்** வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு, ஏழாவது அட்டவணையின் சட்டமன்றப் பட்டியல்களில் உள்ள பதிவுகளை, குறிப்பாக ஒன்றியப் பட்டியலின் 66 வது பதிவு மற்றும் ஒருங்கியல்

பட்டியலின் 25 வது பதிவு ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளவில்லை;

(ii) மனுதாரர்களின் முக்கிய வாதம் என்னவென்றால், உயர்கல்விக்கான நிறுவனங்களில் ஒருங்கிணைப்பு மற்றும் தரங்களை நிர்ணயிப்பது ஒன்றியத்தின் பிரத்யேக அதிகார வரம்பிற்குள் வருகிறது (பதிவு 66 பட்டியல் I), மருத்துவக் கல்வி ஒருங்கியல் பட்டியலில் (பதிவு 25 பட்டியல் III) உள்ள ஒரு அம்சமாகும். பட்டியல் III பதிவு 25, பட்டியல் I பதிவு 66 க்கு உட்பட்டது என்றாலும், முதுகலை மருத்துவப் படிப்புகளுக்கு சேர்க்கை செய்யும் முறை மற்றும் வழிமுறை குறித்து சட்டம் இயற்றுவதற்கான அதிகாரத்தை மாநில அரசு இழக்கவில்லை;

(iii) தற்போதைய மனுக்களின் தொகுப்பில் எழுப்பப்பட்ட வாதங்கள், **தினேஷ் சிங் சவுகான்** வழக்கில் இந்த நீதிமன்றத்தில் பேசப்படவில்லை;

(iv) **தினேஷ் சிங் சவுகான்** வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு, **ஆர்.சித்ரலேகா /எதிர்/ மைசூர் மாநில அரசு,** ([1964] 6 எஸ்.சி.ஆர். 368); **குமாரி சித்ரா கோஷ் /எதிர்/ இந்திய அரசு,** [(1969) 2 எஸ்.சி.சி. 228] மற்றும் **நவீன பல் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம்**

/எதிர்/ மத்தியப் பிரதேச மாநில அரசு, [(2016) 7 எஸ்.சி.சி. 353] ஆகிய வழக்குகளில் அரசியலமைப்பு அமர்வு அளித்த மூன்று தீர்ப்புகளை கருத்தில் கொள்ளவில்லை; மற்றும்

(v) **தினேஷ் சிங் சவுகான்** வழக்கில் வழங்கப்பட்டதைப் போன்ற, சம எண்ணிக்கையிலான நீதிபதிகளைக் கொண்ட அமர்வுகளால் வழங்கப்பட்ட தீர்ப்புகளும் உள்ளன.

3. ஒரு பெரிய அமர்வுக்குப் பரிந்துரைக்கும் போது, பரிந்துரைக்கப்படும் உத்தரவு, "இடைக்கால நிவாரணம் கூட பெரிய அமர்வால் பரிசீலிக்கப்படுவது பொருத்தமானது" என்று குறிப்பிட்டது. அதன்படி, கற்றறிந்த தலைமை நீதியரசரின் உத்தரவின் பேரில், இடைக்கால நிவாரணம் குறித்த கேள்வியை பரிசீலிக்க வழக்கு நடவடிக்கைகள் அரசியலமைப்பு அமர்வு முன் வைக்கப்பட்டுள்ளன.

4. திரு.அரவிந்த் தத்தர் மற்றும் திரு.கே.வி.விஸ்வநாதன், மனுதாரர்களின் கற்றறிந்த மூத்த வழக்கறிஞர்கள், திரு.அமன் லேகி, கற்றறிந்த கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர் மற்றும் திரு.ஏ.கே.சின்ஹா, எதிர்மனுதாரர்கள் - இந்திய அரசின் கற்றறிந்த மூத்த வழக்கறிஞர், திரு விகாஸ் சிங், எம்.சி.ஐ.-யின் கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் மற்றும் திரு வி.கிரி, தமிழக அரசின் கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் ஆகியோரின் வாதங்களை கேட்டறிந்தோம்.

5. **தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கம் மற்றும் பலர் /எதிர்/ இந்திய அரசு மற்றும் பலர்**, [நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண் 196/2018] என்ற வழக்கில் கீழ்க்கண்ட நிவாரணங்கள் கோரப்பட்டுள்ளன.

> "(அ) முதுகலை மருத்துவக் கல்வி ஒழுங்குமுறைகள், 2000, ஒழுங்குமுறை 9 (மிகவும் குறிப்பாக, ஒழுங்குமுறை 9 (iv) மற்றும் 9 (vii) ஆகியவை, பட்டப்படிப்புகளில் சேர விரும்பும் பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு (in-service candidates) தனி நுழைவு மூலத்தை வழங்குவதற்கான பட்டியல் III, பிரிவு 25-ன் கீழ் உள்ள மாநிலங்களின் அதிகாரத்தை பறிக்கவில்லை என்று செயலுறுத்தும் நீதிப்பேராணை (writ of mandamus) அல்லது வேறு பொருத்தமான நீதிப்பேராணை/உத்தரவு/வழிகாட்டுதல் மூலம் அறிவிக்க வேண்டும்;
>
> (ஆ) மாற்றாக, முதுகலை மருத்துவக் கல்வி ஒழுங்குமுறைகள், 2000, ஒழுங்குமுறை 9, பட்டப்படிப்புகளில் சேர விரும்பும் பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு (in-service candidates) தனி நுழைவு மூலத்தை வழங்க மாநிலங்களை அனுமதிக்காது என்று புரிந்து கொள்ளப்பட்டால், ஒழுங்குமுறை 9 (மிகவும் குறிப்பாக, ஒழுங்குமுறை 9 (iv) மற்றும் 9 (vii) ஆகியவை தன்னிச்சையானவை, பாகுபாடு காட்டுபவை மற்றும் இந்திய அரசியலமைப்புச் சட்டம்,

ஷரத்து 14 மற்றும் ஷரத்து 19(1)(g) ஆகியவற்றை மீறுவதாகவும், 1956 ஆம் ஆண்டின் இந்திய மருத்துவ கவுன்சில் சட்டத்தின் விதிகளை மீறுவதாகவும் உள்ளது என்று செயலுறுத்தும் நீதிப்பேராணை (writ of mandamus) அல்லது வேறு பொருத்தமான நீதிப்பேராணை/உத்தரவு/வழிகாட்டுதல் மூலம் அறிவிக்க வேண்டும்;"

6. முதுகலை மருத்துவக் கல்வி ஒழுங்குமுறைகள் 2000, விதிமுறை 9-ன் செயல்பாட்டை, முதுகலை படிப்புகளில் சேர விரும்பும் பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு (in-service candidates) தனி நுழைவு மூலத்தை மாநிலங்கள் வழங்குவதை சட்ட வகையங்கள் தடுப்பதாகக் கருதப்படும் அளவிற்கு, இந்த நீதிமன்றம் நிறுத்திவைக்க வேண்டும் என்பதே இடைக்கால வேண்டுரையாகும். 2018-2019 ஆம் கல்வியாண்டில் முதுகலை பட்டப்படிப்புகளில் சேருவதற்கு பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு (in-service candidates) தனி நுழைவு மூலத்தை வழங்கும் தமிழக அரசின் கொள்கையை அமல்படுத்த அனுமதி கோரப்பட்டுள்ளது.

7. மனுதாரர்கள் சார்பில் ஆஜரான கற்றறிந்த மூத்த வழக்கறிஞர், 1989 ஆம் ஆண்டு முதல், பட்டப் படிப்புகளில் சேருவதற்கு மாநிலத்தின் மொத்த இடங்களில் 50 சதவீதம் பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு (in-service

candidates) தனி நுழைவு மூலத்தை வழங்குவதற்கான கொள்கையை தமிழ்நாடு அரசு கொண்டுள்ளது என்ற வாதத்தை முன்வைத்தார். மேலும், 2007 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு அரசு, அரசாணை வாயிலாக, ஊரக, மலைப்பகுதி மற்றும் கடினமான பகுதிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது. அரசு மருத்துவமனைகளில், குறிப்பாக கிராமப்புற, மலைப்பகுதி மற்றும் கடினமான இடங்களில் போதுமான சுகாதார வசதிகளை வழங்குவதை உறுதி செய்வதற்காக இந்த கொள்கை பின்பற்றப்படுகிறது. இந்தப் பின்னணியில், கீழ்க்கண்ட வாதங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன:

(i) அரசியலமைப்புச் சட்டம், ஏழாவது அட்டவணையின் பட்டியல் III பதிவு 25 ("கல்வி, உட்பட.. மருத்துவக் கல்வி.."), பட்டியல் I பதிவு 66-க்கு ("உயர்கல்விக்கான நிறுவனங்களில் தரங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் தீர்மானித்தல்"), உட்பட்டது என்றாலும், முதுகலை மருத்துவப் படிப்புகளுக்கு சேர்க்கை செய்யும் முறை மற்றும் வழிமுறை குறித்து சட்டம் இயற்றுவதற்கான அதிகாரத்தை மாநில அரசு இழக்கவில்லை;

(ii) பட்டியல் I பதிவு 66 மற்றும் பட்டியல் III பதிவு 25 ஆகியவற்றுக்கு இடையேயான உறவு, மேற்கூறிய **ஆர் சித்ரலேகா, குமாரி சித்ர கோஷ் மற்றும் நவீன பல் மருத்துவக் கல்லூரி** வழக்குகளில் இந்த

நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு அளித்த மூன்று தீர்ப்புகளால் பரிசீலிக்கப்பட்டுள்ளது;

(iii) **கே.துரைசாமி /எதிர்/ தமிழ்நாடு மாநில அரசு**, (2001) 2 எஸ்.சி.சி. 538; **எய்ம்ஸ் மாணவர் சங்கம் /எதிர்/ எய்ம்ஸ்,** (2002) 1 எஸ்.சி.சி. 428 மற்றும் **மத்தியப் பிரதேச மாநில அரசு /எதிர்/ கோபால் டி தீர்த்தனி,** (2003) 7 எஸ்.சி.சி. 83 ஆகிய வழக்குகளில் இந்த நீதிமன்றம் தனது தீர்ப்புகளில், முதுகலை பட்டப் படிப்புகள் மற்றும் பட்டயப் படிப்புகளில் ஒரு குறிப்பிட்ட சதவீத இடங்களை ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு தனி நுழைவு மூலத்துடன் ஒதுக்குவதற்கான மாநில அரசுகளின் உரிமையை உறுதி செய்துள்ளது. அத்தகைய அதிகாரத்தைப் பயன்படுத்துவது ஒரு முறையான வகைப்பாட்டின் அடிப்படையில் இருக்கும் வரை செல்லுபடியாகும் என்று கூறப்பட்டது;

(iv) அரசுப் பணியிலிருக்கும் மருத்துவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையிலான வகைப்பாடு நியாயமானது மற்றும் பொதுத்துறையில் போதுமான மற்றும் மலிவு விலையிலான சுகாதார வசதிகளை உறுதி செய்யும் நோக்கத்துடன் தொடர்புடையது; மற்றும்

(v) **தினேஷ் சிங் சவுகான்** வழக்கில் ஒழுங்குமுறை 9-ல் முதுகலை பட்டப்படிப்புகளில் சேருவதற்கு பணியிலிருக்கும்

விண்ணப்பதாரர்களுக்கு (in-service candidates) இட ஒதுக்கீடு அனுமதிக்கத்தக்கதல்ல, ஏனெனில், ஒழுங்குமுறை 9(VII)-ன் கீழ் பட்டயப் படிப்புகளுக்கு மட்டுமே இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது என்பதற்கான விளக்கம், பின்வரும் காரணங்களுக்காக மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்:

(அ) பட்டியல் III பதிவு 25-ன் கீழ் பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு (in-service candidates) தனி நுழைவு மூலத்தை மாநில அரசு வழங்குவதைத் தடுக்கும் ஒழுங்குமுறை 9-ல் வெளிப்படையான அல்லது மறைமுகமான தடை எதுவும் இல்லை. மாறாக, ஒழுங்குமுறைகள் 9 (IV) மற்றும் 9 (VII)-ன் வரம்புரை காரணமாக, பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு (in-service candidates) முன்னுரிமை வழங்குவது பாராட்டத்தக்க நோக்கமாக கருதுப்படுகிறது;

(ஆ) ஒழுங்குமுறை 9 (VII) பட்டய படிப்புகளுக்கு இட ஒதுக்கீட்டை வழங்குகிறது என்ற அடிப்படையில் மட்டுமே பட்டப் படிப்புகளில் பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு (in-service candidates) இடஒதுக்கீடு வழங்கும் மாநிலங்கள்

குறித்து ஒரு மறைமுக உள்ளடக்கத்தை அனுமானிக்க முடியாது ;

(இ) ஒழுங்குமுறை 9 தன்னளவில் ஒரு முழுமையான விதி என்று கூறினாலும், **தினேஷ் சிங் சவுகான்** வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு, **சுதிர்.என். /எதிர்/ கேரளா மாநில அரசு**, [(2015) 6 எஸ்.சி.சி. 685] மற்றும் மேற்சொன்ன **கோபால் டி. தீர்த்தனி** ஆகிய வழக்குகளில் எடுக்கப்பட்ட முடிவுகளை சரியாகக் கையாளவில்லை;

(ஈ) பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு ஒரு தனி நுழைவு மூலத்தை வழங்குவது, இந்திய மருத்துவக் கவுன்சில் [MCI] நிர்ணயித்த தரத்தை குறைக்காது, ஏனெனில் தகுதியான அனைத்து விண்ணப்பதாரர்களும் நீட் தேர்வில் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களை எட்டியிருப்பார்கள் மற்றும் பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களின் இடைநிலை தகுதியின் அடிப்படையில் சேர்க்கை நடைபெறும்; மற்றும்

(உ) நவீன பல் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் வழக்கில் அரசமைப்புச் சட்ட அமர்வு அளித்த தீர்ப்பில், ஒரு மாநிலம் அதன் குடியிருப்பாளர்களின் நலன் மற்றும்

மேம்பாட்டிற்கு பொறுப்பாக இருப்பதால், பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வது மாநிலத்தின் சிறப்புரிமை என்று கூறியுள்ளது.

(ஊ) பட்டப் படிப்புகளில் சேருவதற்கு பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு கூடுதல் மதிப்பெண் (weightage) வழங்குவது மட்டும், கடினமான சூழ்நிலைகளில் பணிபுரியும் போது இத்தகைய விண்ணப்பதாரர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்கள் போதுமான எண்ணிக்கையில் தகுதி பெறுவதை உறுதி செய்யாது..

முதல் கட்ட கலந்தாய்வு ஏற்கனவே நடந்து முடிந்துள்ளதால், முதுகலை பட்டப்படிப்புகளில் சேருவதற்கு பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு தனி நுழைவு மூலத்தை வழங்குவதிலிருந்து மாநில அரசுகள் தடுக்கப்படக்கூடாது என்பதை உறுதிப்படுத்த இடைக்கால உத்தரவு அவசியம் என்ற வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

8. மறுபுறம், பட்டியல் III பதிவு 25 பட்டியல் I பதிவு 66 க்கு வெளிப்படையாக உட்பட்டது என்ற வாதம் இந்திய அரசு மற்றும் இந்திய மருத்துவக் கவுன்சில்

சார்பில் முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே, மருத்துவக் கல்வி குறித்து சட்டம் இயற்றுவதற்கான மாநிலங்களின் அதிகாரம் 246 வது ஷரத்தின் கீழ் இருந்தாலும், உயர்கல்வியில் உள்ள தரநிலைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்ணயம் செய்தல் தொடர்பான விஷயங்களில் இந்திய அரசின் மேலதிக அதிகாரத்திற்கு உட்பட்டது ஆகும். ஒழுங்குமுறை 9 தன்னளவில் ஒரு முழுமையான விதியாகும். ஒழுங்குமுறை 9 (iv), பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு தொலைதூர மற்றும் / அல்லது கடினமான பகுதிகளில் பணியாற்றும் ஒவ்வொரு ஆண்டு பணி சேவைக்கும், அவர்கள் நீட் தேர்வில் பெற்ற மதிப்பெண்களில் அதிகபட்சம் 30 சதவீதம் வரை, 10 சதவீதம் ஊக்க மதிப்பெண்ணை வழங்குகிறது. மத்திய சட்டத்தின்படி அமைக்கப்பட்ட கொள்கை வகுப்பில் நிபுணத்துவம் வாய்ந்த அமைப்பான இந்திய மருத்துவக் கவுன்சில், முதுகலை மருத்துவப் பட்டப்படிப்பு சேர்க்கையில் பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே ஊக்க மதிப்பெண்கள் வழங்க வகை செய்யும் சட்ட விதிமுறைகளை வகுத்துள்ளது. மத்திய அரசு மற்றும் இந்திய மருத்துவக் கவுன்சில் ஆகியவற்றின் பரிசீலனையான பார்வையில், பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவது அல்லது தனி நுழைவு மூலம் வழங்குவது மருத்துவக் கல்வியின் தரத்தை ஒருங்கிணைக்கவும் தீர்மானிக்கவும் இந்திய மருத்துவக் கவுன்சிலின் அதிகாரத்தை நேரடியாகப்

பாதிக்கும். **தினேஷ் சிங் சவுகான்** வழக்கின் தீர்ப்பு, 2012 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட ஒழுங்குமுறை 9-ன் வகையங்களை குறிப்பாக விளக்குகிறது. மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வின் தீர்ப்பு நடைமுறையில் இருக்கும் வரை, இந்த கட்டத்தில் எந்தவொரு இடைக்கால நிவாரணம் வழங்குவதை குறித்து சிந்திக்க முடியாது. பணியிலிருக்கும் பட்டப்படிப்பு முடித்த விண்ணப்பதாரர்களுக்கு ஒரு தனி நுழைவு மூலத்தை பரிந்துரைப்பது, இந்திய மருத்துவ கவுன்சில் வாதிட்ட படி, மருத்துவக் கல்வியின் தரத்தை நேரடியாகக் குறைக்கும். தகுதி சமரசம் செய்யப்படும் மற்றும் பட்டியல் I பதிவு 66-ன் கீழ் அளவுகோல்களை பரிந்துரைப்பது பாதிப்பு ஏற்படுத்தும்.

9. விதி 9, பிப்ரவரி 15, 2012 அன்று திருத்தப்பட்டபடி, பின்வருமாறு கூறுகிறது:

> "9. முதுகலை படிப்புகளுக்கான விண்ணப்பதாரரைத் தேர்ந்தெடுப்பதற்கான நடைமுறை பின்வருமாறு இருக்கும்.-
>
> (I) ஒவ்வொரு கல்வியாண்டிலும் "முதுகலை மருத்துவப் படிப்புகளில் சேருவதற்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு" என்ற ஒரே தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு இருக்க வேண்டும். தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வின் மேற்பார்வை, நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடு ஆகியவை இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல

அமைச்சகத்தின் ஒட்டுமொத்த மேற்பார்வையின் கீழ் தேசிய தேர்வு வாரியத்திடம் ஒப்படைக்கப்படும்.

(II) வருடாந்திர அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர் சேர்க்கை அளவில் 3% இடங்கள் 50% முதல் 70% வரை கீழ்க்கால் அசைவு குறைபாடு (locomotory disability of lower limbs) கொண்ட விண்ணப்பதாரர்களால் நிரப்பப்பட வேண்டும்:

வரம்புரையாக இந்த 3% ஒதுக்கீட்டில் ஏதேனும் ஒரு இடம், 50% முதல் 70% வரை கீழ்க்கால் அசைவு குறைபாடுள்ள (locomotory disability of lower limbs) விண்ணப்பதாரர்கள் கிடைக்காததன் காரணமாக நிரப்பப்படாமல் இருந்தால், இந்த 3% ஒதுக்கீட்டில் அத்தகைய நிரப்பப்படாத இடங்கள், பொதுப் பிரிவு விண்ணப்பதாரர்களுக்கான வருடாந்திர அனுமதிக்கப்பட்ட இடங்களில் சேர்க்கப்படுவதற்கு முன்பு, 40% முதல் 50% வரை கீழ்க்கால் அசைவு குறைபாடுள்ள (locomotory disability of lower limbs) விண்ணப்பதாரர்களால் நிரப்பப்படும்:

மேலும் வரம்புரையாக இந்த முழு செயல்பாடும் ஒவ்வொரு மருத்துவக் கல்லூரி/நிறுவனத்தாலும் சேர்க்கைக்கான சட்டப்பூர்வ கால அட்டவணையின்படி முடிக்கப்பட வேண்டும்.

(III) ஒரு குறிப்பிட்ட கல்வியாண்டில் எந்தவொரு முதுகலை படிப்பிலும் சேருவதற்கு தகுதி பெற, ஒரு விண்ணப்பதாரர் அந்த கல்வியாண்டில் நடத்தப்பட்ட "முதுகலை படிப்புகளுக்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில்" குறைந்தபட்ச 50 சதவீதம் மதிப்பெண்களைப் பெறுவது அவசியமாகும். இருப்பினும், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினை சேர்ந்த விண்ணப்பதாரரைப் பொறுத்தவரை, குறைந்தபட்ச மதிப்பெண்கள் 40 சதவீதமாக இருக்க வேண்டும். மேலே உள்ள சட்டக்கூறு (II)-ல் வழங்கப்பட்டுள்ளபடி, கீழ்க்கால் அசைவு குறைபாடுள்ள (locomotory disability of lower limbs) விண்ணப்பதாரர்களுக்கு, குறைந்தபட்ச மதிப்பெண்கள் 45 சதவீதமாக இருக்கும். முதுகலைப் படிப்புகளுக்கான "தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில்" அகில இந்திய பொதுத் தகுதிப் பட்டியலில் பெற்ற அதிகபட்ச மதிப்பெண்களின் அடிப்படையில் சதவீதம் தீர்மானிக்கப்படும்.

வரம்புரையாக முதுகலைப் பட்டப் படிப்புகளில் சேர்வதற்காக ஒரு குறிப்பிட்ட கல்வி ஆண்டில் நடத்தப்பட்ட தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில், அந்தந்த பிரிவுகளில் போதுமான

எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறத் தவறும்போது, மத்திய அரசு, இந்திய மருத்துவக் கவுன்சிலுடன் கலந்தாலோசித்து, தனது விருப்பத்தின் பேரில், அந்தந்த பிரிவுகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு முதுகலைப் பட்டப் படிப்பில் சேருவதற்குத் தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களைக் குறைக்கலாம் மற்றும் மத்திய அரசால் அவ்வாறு குறைக்கப்படும் மதிப்பெண்கள் அந்தக் கல்வியாண்டிற்கு மட்டுமே பொருந்தும்.

(IV) மருத்துவக் கல்லூரிகள்/கல்வி நிறுவனங்களில் அந்தந்த பிரிவுகளுக்கான இட ஒதுக்கீடு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் நடைமுறையில் உள்ள பொருந்தக்கூடிய சட்டங்களின்படி இருக்கும். *தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் பெறப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களின் அகில இந்திய தகுதி பட்டியல் ஒன்றும் மற்றும் மாநில வாரியான தகுதி பட்டியலும் தயாரிக்கப்பட வேண்டும் மற்றும் விண்ணப்பதாரர்கள் மேற்கூறிய தகுதி பட்டியல்களிலிருந்து மட்டுமே முதுகலை படிப்புகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள்:*

வரம்புரையாக அரசு/பொது அதிகார அமைப்பில் பணிபுரியும் விண்ணப்பதாரர்களின் தகுதியைத் தீர்மானிப்பதில், தொலைதூர மற்றும்/அல்லது கடினமான பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டு பணி சேவைக்கும், தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களில் அதிகபட்சம் 30% வரை, அரசு/தகுதிவாய்ந்த அதிகாரியால் 10% வீதத்தில் மதிப்பெண்களில் கூடுதல் மதிப்பெண் (weightage) வழங்கப்படலாம், தொலைதூர மற்றும் கடினமான பகுதிகள் அவ்வப்போது மாநில அரசு / தகுதிவாய்ந்த அதிகார அமைப்பால் வரையறுக்கப்படும்.

(V) மேற்கண்ட சட்டக்கூறு (II)-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களைப் பெறத் தவறிய எந்தவொரு விண்ணப்பதாரரும் மேற்கூறிய கல்வியாண்டில் எந்தவொரு முதுகலை படிப்பிலும் சேர்க்கப்பட மாட்டார்கள்.

(VI) அரசு சாரா மருத்துவக் கல்லூரிகள் / நிறுவனங்களில், மொத்த இடங்களில் 50% இடங்கள் மாநில அரசு அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட அதிகார அமைப்பால் நிரப்பப்படும், மற்றும் மீதமுள்ள 50% இடங்கள் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தகுதிப் பட்டியலின்

படி, சம்பந்தப்பட்ட மருத்துவக் கல்லூரிகள் / நிறுவனங்களால் நிரப்பப்படும்.

(VII) தொலைதூர மற்றும்/அல்லது கடினமான பகுதிகளில் குறைந்தது மூன்று ஆண்டுகள் *பணியாற்றிய அரசுப் பணியிலிருக்கும் மருத்துவ அலுவலர்களுக்கு* முதுகலை பட்டயப் படிப்புகளில் 50% இடங்கள் ஒதுக்கப்படும். முதுகலை டிப்ளமோ பெற்ற பிறகு, மருத்துவ அதிகாரிகள் அவ்வப்போது மாநில அரசு / தகுதிவாய்ந்த அதிகார அமைப்பால் வரையறுக்கப்பட்ட தொலைதூர மற்றும் / அல்லது கடினமான பகுதிகளில் இன்னும் இரண்டு ஆண்டுகள் பணியாற்றுவார்கள்.

(VIII) ஒவ்வொரு ஆண்டும் முதுகலை படிப்புகளுக்கான கற்பித்தல் மே 2 ஆம் தேதிக்குள்ளும், மற்றும் சிறப்பு உயர்நிலை மருத்துவ படிப்புகளுக்கான கற்பித்தல் ஆகஸ்ட் 1 ஆம் தேதிக்குள்ளும் தொடங்கும் வகையில் சேர்க்கை செயல்முறையை பல்கலைக்கழகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பிற அதிகார அமைப்புகள் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த நோக்கத்திற்காக, பின்னிணைப்பு III-இல் குறிப்பிடப்பட்டுள்ள நேர அட்டவணையை அவர்கள் பின்பற்ற வேண்டும்.

(IX) மே 31-ம் தேதிக்கு பிறகும் முதுகலை பட்டப்படிப்புகளுக்கும், செப்டம்பர் 30-ம் தேதிக்கு பிறகு சிறப்பு உயர்நிலை மருத்துவ படிப்புகளுக்கும் எந்தச் சூழ்நிலையிலும் மாணவர் சேர்க்கை நடைபெறக் கூடாது. குறிப்பிட்ட தேதிக்கு பிறகு அனுமதிக்கப்பட்ட எந்தவொரு மாணவரையும் பல்கலைக்கழகங்கள் பதிவு செய்யக்கூடாது.

(X) சேர்க்கைக்கான கடைசி தேதிக்குப் பிறகு சேர்க்கை பெற்றதாக அடையாளம் காணப்பட்ட எந்தவொரு மாணவரையும் படிப்பிலிருந்து நீக்கலாம் அல்லது அத்தகைய மாணவருக்கு வழங்கப்பட்ட எந்தவொரு மருத்துவத் தகுதியும் 1956 ஆம் ஆண்டு இந்திய மருத்துவக் கவுன்சில் சட்டத்தின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட தகுதியாக கருதப்படாது என்று இந்திய மருத்துவக் கவுன்சில் அறிவுறுத்தலாம். குறிப்பிடப்பட்ட கடைசி தேதிக்குப் பிறகு எந்தவொரு மாணவருக்கும் சேர்க்கை வழங்கும் நிறுவனம், அடுத்த கல்வியாண்டில் அதன் அனுமதிக்கப்பட்ட சேர்க்கை திறனிலிருந்து செய்யப்பட்ட அத்தகைய சேர்க்கையின் அளவிற்கு சமமான இடங்களை ஒப்படைப்பது உட்பட, இந்திய மருத்துவக் கவுன்சில்

பரிந்துரைக்கும் அத்தகைய நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். (அதே ஆவணத்தின் பக்கங்கள் 764-766)

பட்டியல் I பதிவு 66 பின்வருமாறு கூறுகிறது:

"66. உயர்கல்வி அல்லது ஆராய்ச்சி மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான நிறுவனங்களில் தரநிலைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் தீர்மானித்தல்."

பட்டியல் III பதிவு 25 பின்வருமாறு கூறுகிறது:

"25. பட்டியல் I பதிவுகள் 63, 64, 65 மற்றும் 66 ஆகியவற்றின் வகையங்களுக்கு உட்பட்டு, தொழில்நுட்பக் கல்வி, மருத்துவக் கல்வி மற்றும் பல்கலைக்கழகங்கள் உள்ளடங்கலான கல்வி; தொழிலாளர்களின் தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி."

10. மேற்சொன்ன **நவீன பல் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம்** வழக்கில், இந்த நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு, "தரங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் தீர்மானித்தல்" என்ற சொற்றொடர் தரங்களை நிர்ணயிப்பதைக் குறிக்கிறது என்று கூறியது. எனவே, உயர்கல்வி நிறுவனங்களுக்கான தரங்களை நிர்ணயிக்கும் போது, மத்திய அரசிற்கு மட்டுமே பிரத்யேக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு அமர்வு சார்பில் பேசிய மாண்புமிகு நீதியரசர் முனைவர் ஏ.கே.சிக்ரி கூறியதாவது:

"102. சேர்க்கை உட்பட பெரும்பாலான கல்வி நடவடிக்கைகள் இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளன: முதலாவது கல்வியின் குறைந்தபட்ச தரநிலைகளை ஏற்றுக்கொள்வது மற்றும் நிறுவுவது பற்றியது. குறைந்தபட்ச தரநிலைகளை நிர்ணயிப்பதன் நோக்கம், நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் கல்வியின் தகுதி மற்றும் தரத்தின் அளவுகோலை வழங்குவதாகும். கூடுதலாக, நாடு தழுவிய அளவில் தீர்மானிக்கப்பட்ட கல்வித் தரநிலைகளை ஒருங்கிணைப்பது என்பது, அத்தகைய தரநிலைகளை தீர்மானிப்பதன் துணைச் செயல்பாடாகவே உள்ளது. நாட்டின் பரந்த பன்முகத்தன்மையை உணர்ந்து, அடிப்படை ஆரம்பக் கல்வி கூட இல்லாத நிலையிலிருந்து உயர்தர கல்வி நிறுவனங்கள் வரை கல்வியின் தரங்கள் ஏற்ற இறக்கமாக உள்ளன, இதனால், பல்வேறு மட்டங்களில், குறிப்பாக ஆராய்ச்சி நிறுவனங்கள், உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் மட்டத்தில் குறைந்தபட்ச அடிப்படை கல்வித் தரத்தை நிர்ணயிப்பது விரும்பத்தக்கது என்று கருதப்பட்டது. அத்தகைய நிலையில், உள்ளூர் மற்றும் பிராந்திய மட்டங்களின் தேவைகள் மற்றும் அத்தியாவசியங்களுக்கு ஏற்ப கல்வி வழங்குவதற்கான

மாநிலங்களின் தேவைகளை சமநிலைப்படுத்தும் அதே வேளையில், தேசத்திற்கு ஒரு சீரான குறைந்தபட்ச தரநிலையை அமைப்பது அவசியமாக இருந்தது. இதன் விளைவாக, அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் ஆராய்ச்சி, உயர் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி ஆகிய துறைகளில் கல்வியின் சீரான தரத்தை பராமரிக்கும் நோக்கத்துடன் பட்டியல் I பதிவு 66 -ஐ வழங்கினர்கள். (அதே ஆவணத்தின் பக்கம் 430)

நாடாளுமன்றம் நிர்ணயிக்கும் கல்வித் தரத்தை அமல்படுத்துவதும், கல்வியின் முழுச் செயல்பாட்டை ஒழுங்குபடுத்துவதும் அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட தரங்களைப் பயன்படுத்துவதை இன்றியமையாததாக்குகிறது. பட்டியல் I பதிவு 66 மற்றும் பட்டியல் III பதிவு 25 ஆகியவற்றுக்கு இடையேயான சமநிலை, முந்தைய அரசியலமைப்பு அமர்வு முடிவுகளை மறுபரிசீலனை செய்ததன் மூலம் சுருக்கமாக வரையப்பட்டுள்ளது:

"104... குஜராத் பல்கலைக்கழகம் [குஜராத் பல்கலைக்கழகம் /எதிர்/ கிருஷ்ணா ரங்கநாத் முதோல்கர், ஏ.ஐ.ஆர். 1963 எஸ்.சி. 703: 1963 சப்ளி. (1) எஸ்.சி.ஆர். 112] என்ற வழக்கில், ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு, பட்டியல் I பதிவு 66-ஐ குறிப்பிட்டு, பட்டியல் II பதிவு 11-ன் (இது இப்போது பட்டியல் III பதிவு 25 ஆக உள்ளது) நோக்கத்தை ஆய்வு

செய்தது. நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அளவுக்கு, கல்வி தொடர்பாக சட்டம் இயற்றும் அரசின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது. தரங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்ணயித்தல் ஆகியவை பட்டியல் I-ன் வரம்பிற்குள் இருந்தன மற்றும் மாநிலத்தின் அதிகாரம் மேற்கூறிய விஷயத்தில் மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது. இரண்டு பதிவுகளும் ஓரளவுக்கு ஒன்றுடன் ஒன்று பொருந்துகின்றன என்றும், பட்டியல் I பதிவு 66 வழங்கிய அதிகாரம் மாநிலத்தின் அதிகாரத்தை விட மேலானதாக இருக்க வேண்டும் என்றும் கருதப்பட்டது. ஒரு மாநிலச் சட்டத்தின் செல்லுபடியாகும் தன்மை என்பது, மத்திய அரசின் சட்டம் இல்லாவிட்டாலும் கூட, அது "தரநிலைகளின் ஒருங்கிணைப்பு அல்லது நிர்ணயம்" பாரபட்சமாக பாதிக்கிறதா என்பதைப் பொறுத்தது. ஆர்.சித்ரலேகா /எதிர்/ மைசூர் மாநில அரசு, [ஆர்.சித்ரலேகா /எதிர்/ மைசூர் மாநில அரசு, ஏ.ஐ.ஆர். 1964 எஸ்.சி. 1823: (1964) 6 எஸ்.சி.ஆர். 368] என்ற வழக்கில், அதே பிரச்சினை மீண்டும் பரிசீலிக்கப்பட்டது. மாநிலச் சட்டத்தின் தாக்கம் மிக அதிகமாகவோ அல்லது அழிவுகரமானதாகவோ இருந்து, அது மத்தியத் துறையை முற்றிலுமாக நீக்கிவிடுவதற்கோ அல்லது

சுருக்கிக் குறைப்பதற்கோ வழிவகுத்தால், அந்த சட்டம் ரத்து செய்யப்படலாம் என்று அவதானிக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில அரசு /எதிர்/ அதியமான் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் [தமிழ்நாடு மாநில அரசு /எதிர்/ அதியமான் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், (1995) 4 எஸ்.சி.சி. 104: 1 எஸ்.சி.இ.சி. 682] , பதிவு 25-ன் கீழ் மாநில சட்டம் மத்திய சட்டத்துடன் முரண்படும் அளவிற்கு, அது செல்லுபடியாகாது மற்றும் செயல்படாது என்று கவனிக்கப்பட்டது. இதேபோன்ற கருத்து, ப்ரீத்தி ஸ்ரீவஸ்தவா [ப்ரீத்தி ஸ்ரீவஸ்தவா /எதிர்/ மத்தியப் பிரதேச மாநில அரசு] (1999) 7 எஸ்.சி.சி. 120: 1 எஸ்.சி.இ.சி. 742] மற்றும் மகாராஷ்டிரா மாநில அரசு /எதிர்/ சந்த் தியானேஷ்வர் சிக்ஷன் சாஸ்திர மகாவித்யாலயா [மகாராஷ்டிரா மாநில அரசு /எதிர்/ சந்த் தியானேஷ்வர் சிக்ஷன் சாஸ்திர மகாவித்யாலயா, (2006) 9 எஸ்.சி.சி. 1: 5 எஸ்.சி.இ.சி. 637] ஆகிய வழக்குகளில் எடுக்கப்பட்டது. மகாராஷ்டிரா மாநில அரசு /எதிர்/ நிவேதிதா ஜெயின் [மகாராஷ்டிரா மாநில அரசு /எதிர்/ நிவேதிதா ஜெயின், (1981) 4 எஸ்.சி.சி. 296] மற்றும் அஜய் குமார் சிங் /எதிர்/ பீகார் மாநில அரசு, [அஜய் குமார் சிங் /எதிர்/ பீகார் மாநில அரசு, (1994) 4 எஸ்.சி.சி. 401] ஆகிய வழக்குகளில், பட்டியல் I பதிவு 66-ன் கீழ் வரும் சேர்க்கை தரநிலைகள் சேர்க்கைக்குப் பிறகு மட்டுமே

பொருந்தும் என்ற எடுக்கப்பட்ட கருத்து, ப்ரீத்தி ஸ்ரீவஸ்தவா [ப்ரீத்தி ஸ்ரீவஸ்தவா /எதிர்/ மத்தியப் பிரதேச மாநில அரசு, (1999) 7 எஸ்.சி.சி. 120: 1 எஸ்.சி.இ.சி. 742] வழக்கில் நிராகரிக்கப்பட்டாலும், பாரதி வித்யாபீடம் [பாரதி வித்யாபீடம் /எதிர்/ மகாராஷ்டிரா மாநில அரசு, (2004) 11 எஸ்.சி.சி. 755: 2 எஸ்.சி.இ.சி. 535] என்ற வழக்கில் தவறாகக் கருதப்பட்டபடி, சேர்க்கையின் முழு செயல்பாடும் பட்டியல் I ஆல் உள்ளடக்கப்பட்டது என்று கருதப்படவில்லை. (அதே ஆவணத்தின் பக்கம் 431)

பட்டியல் III பதிவு 25, பட்டியல் I பதிவு 66 க்கு உட்பட்டது என்றாலும், சேர்க்கையின் முழு செயல்பாடும் சட்டங்களின் வரம்பிலிருந்து விலக்கப்படவில்லை என்று அரசியலமைப்பு அமர்வு கூறியது. எவ்வாறாயினும், "பட்டியல் III பதிவு 25-ன் கீழ் எந்தவொரு அதிகாரத்தையும் பயன்படுத்துவது பதிவு 25-க்கு குறிப்பிடக்கூடிய மத்திய சட்டத்திற்கு உட்பட்டது".

11. மேற்சொன்ன **தினேஷ் சிங் சவுகான்** வழக்கில் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு அளித்த தீர்ப்பின் மூலம் ஒழுங்குமுறை 9-ன் வகையங்கள் விளக்கப்பட்டுள்ளன. இந்த முடிவு, திருத்தப்பட்ட ஒழுங்குமுறை 9-ன் வகையங்களை விளக்கியுள்ளது என்பதை வலியுறுத்த வேண்டும். மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைக்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து,

ஒழுங்குமுறை 9 தன்னளவில் ஒரு முழுமையான விதியாக கருதப்படுகிறது. அந்த வகையில், அவர் கூறியதாவது:

> "24. மருத்துவப் படிப்புகளில் சேருவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து ஒழுங்குமுறை 9 தன்னளவில் ஒரு முழுமையான விதி என்பது இப்போது நன்கு நிறுவப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் அட்டவணை VII பட்டியல் I பதிவு 66-ன் கீழ் வரும் ஒரு விஷயமாக இருப்பதால், மத்திய சட்டம் மற்றும் அதன் கீழ் வகுக்கப்பட்ட ஒழுங்குமுறைகளால் வரையறுக்கப்பட்ட முதுகலை மருத்துவப் பட்டப்படிப்புகளில் சேர்க்கைக்கான நடைமுறையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நிர்வாக அறிவுறுத்தல்களால் எந்தவொரு சட்டத்தையும் இயற்றுவதற்கு மாநில அரசிற்கு அதிகாரம் இல்லை என்பதும் நன்கு நிறுவப்பட்டுள்ளது (பார்க்க ப்ரீத்தி ஸ்ரீவஸ்தவா /எதிர்/ மத்தியப் பிரதேச மாநில அரசு [ப்ரீத்தி ஸ்ரீவஸ்தவா /எதிர்/ மத்தியப் பிரதேச மாநில அரசு, (1999) 7 எஸ்.சி.சி. 120: 1 எஸ்.சி.இ.சி. 742]). முதுகலை பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நடைமுறையானது, மத்திய அரசின் சட்டமும் விதிமுறைகளும் மேலோங்கி இருக்க

வேண்டிய அத்தகைய பகுதிகளில் ஒன்றாகும். (அதே ஆவணத்தின் பக்கம் 766)

தினேஷ் சிங் சவுகான் வழக்கில் மேற்கண்ட சட்டத்தின் கூற்று, **நவீன பல் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம்** வழக்கில், அரசியலமைப்பு அமர்வால் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்ட கொள்கைகளுடன் ஒத்துப்போகிறது. **தினேஷ் சிங் சவுகான்** வழக்கில் எடுக்கப்பட்ட முடிவுக்குப் பிறகு, **நவீன பல் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம்** வழக்கின் முடிவு அறிக்கைகளில் வெளியிடப்பட்டது என்று பரிந்துரைக்கப்படும் உத்தரவு குறிப்பிடுகிறது. எங்கள் பார்வையில், மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வின் தீர்ப்பின் அடிப்படைக் கோட்பாடு, அரசியலமைப்பு அமர்வு வகுத்துள்ள கொள்கைகளுக்கு ஏற்ப உள்ளது.

12. ஒழுங்குமுறை 9 (IV)-ஐ விளக்கும் போது, **தினேஷ் சிங் சவுகான்** வழக்கில், தொடக்க வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் என்பது வெளிப்படையாக பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மற்றும் சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய குடிமக்களுக்கான அரசியலமைப்பு ஒதுக்கீடுகளே தவிர, பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கான ஒதுக்கீடு அல்ல என்று கூறப்பட்டது. விதி 9 (IV)-ன் காப்புரையை விளக்குகையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

"25.4... எனினும் இந்த வகையத்தில் ஒரு காப்புரை உள்ளது. அரசு/பொது அதிகார அமைப்பில் பணிபுரியும் விண்ணப்பதாரர்களின் தகுதியைத் தீர்மானிப்பதில், தொலைதூர மற்றும்/அல்லது கடினமான பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டு பணி சேவைக்கும், நீட் தேர்வில் பெற்ற மதிப்பெண்களில் அதிகபட்சம் 30% வரை, அரசு/தகுதிவாய்ந்த அதிகாரியால் 10% வீதத்தில் மதிப்பெண்களில் கூடுதல் மதிப்பெண் (weightage) வழங்கப்படலாம் என்று இது முன்னிறுத்துகிறது. இந்த வகையம் தாராளமாக வாசிக்கப்பட்டாலும், பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு இடஒதுக்கீடு வழங்காது, ஆனால், பணியிலிருக்கும் விண்ணப்பதாரர் வகுப்பினருக்கு (மாநில அரசால் அறிவிக்கப்பட்ட தொலைதூர மற்றும் கடினமான பகுதிகளில் பணியாற்றியவர்கள்) குறிப்பிடப்பட்டுள்ளபடி ஊக்க மதிப்பெண்கள் வடிவில் ஒரு கூடுதல் மதிப்பெண் (weightage) வழங்க மட்டுமே வழிவகை செய்கிறது." (அதே ஆவணத்தின் பக்கம் 767)

காப்புரையின் இந்த விளக்கம், பயன்படுத்தப்படும் சொற்களின் இயல்பான மற்றும் சாதாரண அர்த்தத்தை தெளிவாகப் பின்பற்றுகிறது. விதி 9 (IV)-ன் காப்புரை, முதுகலை பட்டப்படிப்புகளில் சேருவதற்கு பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கீடு வழங்குவதை கருத்தில் கொள்ளவில்லை,

ஆனால் ஊக்க மதிப்பெண்கள் வழங்குவதை கருத்தில் கொண்டுள்ளது. **தினேஷ் சிங் சவுகான்** வழக்கில், பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கீடு வழங்குவதில் வெளிப்படையான தடை எதுவும் இல்லை என்றும், எனவே அவற்றை மாநில அரசுகள் வழங்குவது அனுமதிக்கப்படும் என்றும் திட்டவட்டமாக மறுக்கப்பட்டுள்ளது:

> "27 .... முதுகலை "பட்டப்படிப்பு" சேர்க்கை தொடர்பாக பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு இட ஒதுக்கீட்டைத் தடுக்க வெளிப்படையான விதி எதுவும் இல்லாததால், மாநில அரசு அத்தகைய இடஒதுக்கீட்டை வழங்குவது சட்டப்படி அனுமதிக்கத்தக்கதல்ல என்று வாதிடப்பட்டது. மேலும், பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு சேர்க்கைக்கான ஒரு தனிப்பட்ட வழியாக அத்தகைய ஏற்பாடு அனுமதிக்கப்படுகிறது என்று பரிந்துரைக்க இந்த நீதிமன்றத்தின் முன்னுதாரணங்கள் உள்ளன. இந்த வாதம் நமக்கு ஏற்புடையதல்ல. முதலாவதாக, சேவையில் அழுத்தப்பட்ட முடிவுகள் சம்பந்தப்பட்ட நேரத்தில் நடைமுறையில் உள்ள விதிமுறைகளால் நிர்வகிக்கப்படும் சேர்க்கை செயல்முறை தொடர்பான விதிகளைக் கருத்தில் கொண்டன. தற்போதைய வழக்கில் சேர்க்கை செயல்முறை, 2013-2014 கல்வியாண்டு முதல்

நடைமுறைக்கு வந்த ஒழுங்குமுறைகளால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த ஒழுங்குமுறை தன்னளவில் ஒரு முழுமையான விதியாகும். குறைந்தபட்சம் முதுகலை "பட்டப்படிப்பு" படிப்புகளைப் பொறுத்தவரை, பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களின் சேர்க்கைக்கு ஒரு தனிப்பட்ட வழி வழங்கப்பட வேண்டும் என்று இந்த ஒழுங்குமுறையில் எதுவும் இல்லை. மாறாக, சட்டக்கூறு (VII)-ன் மூலம் தெளிவாகத் தெரிவது போல, பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்காக முதுநிலை "டிப்ளமோ" படிப்புகளில் 50% இடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. முதுகலை "பட்டப்படிப்பு" படிப்புகளைப் பொறுத்தவரை கூட, பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு இதேபோன்ற தனிப்பட்ட வழியை கருதியிருந்தால், அந்த நிலைப்பாடு ஒழுங்குமுறை 9-ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்." (அதே ஆவணத்தின் பக்கங்கள் 767-768)

13. ஒழுங்குமுறை 9-ஐ வகுக்கும்போது, டிப்ளமோ படிப்புகளுக்கான இடங்களில், அரசின் பணியில் உள்ளவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது என்று தீர்ப்பு குறிப்பிட்டுள்ளது. சட்டமன்றத்தின் பிரதிநிதி இட ஒதுக்கீட்டை வழங்க விரும்பினால், ஒழுங்குமுறை 9 (VII)-ல் உள்ளபடி, ஒரு குறிப்பிட்ட வகையம் செய்யப்பட்டுள்ளது. மறுபுறம், முதுகலை

பட்டப்படிப்புகளுக்கான இடங்களுக்கு, ஒழுங்குமுறை 9 (IV)-இல் ஊக்க மதிப்பெண்களை மட்டுமே பரிந்துரைப்பதற்கான ஒரு விதி உள்ளது. இந்த ஒழுங்குமுறைகள் ஒரு நிபுணர் குழுவால் வகுக்கப்பட்டுள்ளன என்பதைக் கவனத்தில் கொண்டு, அது பின்வருமாறு தீர்ப்பளித்தது:

> "35. மேற்கூறியவாறு, மாநிலத்தில் அறிவிக்கப்பட்ட தொலைதூர மற்றும் கடினமான பகுதிகளில் பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்கள் பெற்ற பணி சேவை மற்றும் அனுபவங்களை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உள்ளடக்கியும், கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் இந்த ஒழுங்குமுறைகள் நிபுணர் குழுவால் வகுக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் அறிவிக்கப்பட்ட தொலைதூர மற்றும் கடினமான பகுதிகளில் பணிபுரிந்த பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு ஊக்க மதிப்பெண்கள் வழங்குவதற்கான நடவடிக்கையை இந்த காப்புரை பரிந்துரைக்கிறது. அவர்களின் தகுதியை நிர்ணயிப்பதற்கான ஒரு பண்பு காரணி என்று இதைச் சொல்லலாம். தகுதியான பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களின் தகுதியைக் கணக்கிடுவதற்கான அளவு காரணி கூட காப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொலைதூர மற்றும்/அல்லது கடினமான பகுதிகளில் பணி புரிந்ததற்கான

ஒவ்வொரு ஆண்டு பணி சேவைக்கு, நீட் தேர்வில் பெற்ற மதிப்பெண்களில் 30% வரை, 10% வரை ஊக்கத்தொகை மதிப்பெண்கள் வழங்க இது திட்டமிடுகிறது. இது நீட் தேர்வில் பெற்ற மதிப்பெண்களுடன் ஊக்கத்தொகை மதிப்பெண்களை இணைக்கும் ஒரு புறநிலை முறையாகும். (அதே ஆவணத்தின் பக்கம் 772)

இந்த முடிவுக்கு வருவதில், **டாக்டர் ப்ரீத்தி ஸ்ரீவஸ்தவா /எதிர்/ மத்தியப் பிரதேச மாநில அரசு**, [(1999) 7 எஸ்.சி.சி. 120] என்ற வழக்கில் அரசியலமைப்பு பெஞ்ச் அளித்த தீர்ப்பையும், மேற்சொன்ன **தீர்த்தானி, எய்ம்ஸ் மாணவர் சங்கம் மற்றும் சுதிர் என்** ஆகிய வழக்குகளில் எடுக்கப்பட்ட முடிவுகளையும் நீதிமன்றம் கவனத்தில் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

14. **தினேஷ் சிங் சவுகான்** வழக்கில் எடுக்கப்பட்ட தீர்ப்பு நடைமுறையில் உள்ளது. இது ஒழுங்குமுறை 9 (IV)-ன் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டதால், குறைந்தபட்சம் தற்போதைய கட்டத்தில், ஒதுக்கித் தள்ள முடியாது. அந்தத் தீர்ப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடு, அரசியலமைப்புச் சட்டம், பட்டியல் I பதிவு 66-க்கு முதன்மையானதாகக் கூறும் கோட்பாட்டுடன் ஒத்துப் போகிறது. இது பட்டியல் III பதிவு 25-ல் உள்ள "இதற்கு உட்பட்டது" என்ற சொற்களின் தெளிவான நோக்கமாகும். தற்போதைய கட்டத்தில் எந்தவொரு இடைக்கால நிவாரணத்தையும் வழங்குவது கட்டாய இறுதி

உத்தரவுக்கு ஒப்பாகும், அதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்திய மருத்துவக் கவுன்சில், ஒரு நிபுணர் அமைப்பாக, கொள்கை அடிப்படையில் செயல்பட்டுள்ளது. இந்த கட்டத்தில், பட்டப்படிப்புகளில் சேருவதற்காக பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு ஒரு தனி நுழைவு மூலத்தை அல்லது இடஒதுக்கீட்டை ஒழுங்குமுறை 9 (IV)-யுடன் சேர்த்துப் படிக்க முயற்சிப்பது, பட்டியல் I பதிவு 66-யையும், மத்திய சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறை அதிகாரங்களைப் பயன்படுத்துவதையும் பாதிக்கும்.

15. இந்தக் காரணங்களால், மனுதாரர்கள் சார்பில் வலியுறுத்தப்பட்ட இடைக்கால நிவாரணத்திற்கான வேண்டுரையை எங்களால் ஏற்க முடியவில்லை. அதன்படி இடைக்கால நிவாரணம் மறுக்கப்படுகிறது. எவ்வாறாயினும், நடைபெறும் கலந்தாய்வு இறுதியில் இந்த பரிந்துரையின் முடிவுக்கு கட்டுப்படும் என்பதை நாங்கள் தெளிவுபடுத்துகிறோம். அதன்படி, வ.வி.எண் 33686/2017 தீர்க்கப்படுகிறது.

வழக்கிடை விண்ணப்பம் முடிக்கப்பட்டது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."